ஆகஸ்டு 2024-இல் தயாரிக்கப்பட்டது
மீளாய்வுத் தேதி: ஆகஸ்டு 2027


# வழக்கமான பரிசோதனைகள்

## எளிதில் வாசிப்பதற்கான வளஆதாரம்

இந்த வளஆதாரம் பல மொழிகளில் கிடைக்கிறது. மேலும் தகவல்களுக்கு உங்கள் பேறுகாலச் செவிலியரிடம் கேளுங்கள்

Sussex
Local Maternity & Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்



பரிசோதனைகள் உங்களையும் உங்கள் குழந்தையையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்கின்றன.

நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள் என்று எங்களிடம் சொன்னதிலிருந்து நீங்கள் சோதனைகளைச் செய்துகொள்ளத் தொடங்குவீர்கள்.

இவை பொதுவாக உங்கள் பேறுகாலச் செவிலி மூலம் மேற்கொள்ளப்படும். உங்களையும் உங்கள் குழந்தையையும் பராமரிப்பதற்காகவே உங்கள் பேறுகாலச் செவிலி இருக்கிறார்.



நீங்கள் ஒவ்வொரு முறையும் உங்கள் பேறுகாலச் செவிலியைப் பார்க்கும் போது சில சோதனைகள் செய்யப்படும்.


இவை பின்வருவனவற்றைப் பரிசோதிக்கின்றன:

- உங்களின் இரத்த அழுத்தம்
- உங்களின் சிறுநீர்
- உங்கள் குழந்தை எந்தளவுக்கு வளர்ந்துள்ளார்.




Sussex Local Maternity & Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்




உங்கள் பேறுகாலச் செவிலி உங்கள் உடல் எடையைச் சரிபார்க்குமாறு கேட்பார். நீங்கள் ஆரோக்கியமாக இருக்க இது உதவும்.

நீங்கள் இல்லை என்று சொல்லலாம்.



உங்களுக்கு இரத்தப் பரிசோதனைகளும் செய்யப்படும்.

இதைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், உங்கள் பேறுகாலச் செவிலியிடம் பேசுங்கள்.



பரிசோதனைகள் பின்வருவன போன்றவற்றைச் சரிபார்க்க உதவலாம்:

- பேறுகால வலிக்கு முந்தைய நிலை (ப்ரீ-எக்லாம்ப்சியா)
- கர்ப்பகால நீரிழிவுநோய்
- இரத்தச் சோகை




Sussex Local Maternity & Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்



உங்கள் பரிசோதனைகள் ஏதேனும் நிலைமைகளை வெளிப்படுத்தினால் கூடுதல் பராமரிப்பும் ஆதரவும் கிடைக்கும்.



பேறுகால வலிக்கு முந்தைய நிலை என்பது உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் ஒரு உடல்நலப் பிரச்சினையாகும்.


இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஆபத்தானதாக இருக்கலாம். உங்கள் கர்ப்பக் காலத்தின் இரண்டாம் பாதியில் நீங்கள் இருக்கும்போது இது நிகழலாம்.

உங்களுக்குப் பேறுகால வலிக்கு முந்தைய நிலை ஏற்பட்டால், உங்களையும் உங்கள் குழந்தையையும் பாதுகாப்பாக வைத்திருக்க கூடுதல் சோதனைகள் செய்யப்படும்.




Sussex Local Maternity & Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்



கர்ப்பக்கால நீரிழிவு நோய் என்பது உங்கள் இரத்தத்தில் அதிகப்படியாக சர்க்கரை இருக்கும் நிலையாகும்.

உங்கள் இரத்தச் சர்க்கரையைக் குறைக்க உங்களுக்கு மருந்துகள் தேவைப்படலாம்.



இரத்தச் சோகை என்பது உங்களிடம் போதுமான ஆரோக்கியமான சிவப்பு இரத்த அணுக்கள் இல்லாத நிலையாகும்.


இது உங்களைக் களைப்பாக இருப்பதாக உணர வைக்கலாம்.

உங்கள் மருத்துவர் உங்களுக்கு உதவ இரும்புச்சத்து மாத்திரைகளை வழங்கலாம்.



Sussex
Local Maternity &
Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்





கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்வதன் மூலம் உங்கள் குழந்தை எப்படி வளர்கிறது என்பதையும், எப்படி ஆரோக்கியமாக இருப்பது என்பதையும் பற்றி மேலும் கண்டறியுங்கள்.

உங்களிடம் இணைய இணைப்பு இல்லையென்றால், உங்களுக்காகப் பக்கங்களை அச்சிட்டுத் தருமாறு உங்கள் பேறுகாலச் செவிலியிடம் கேளுங்கள்.

[nhs.uk/pregnancy/week-by-week](https://nhs.uk/pregnancy/week-by-week)

# வழக்கமான பரிசோதனைகள்





கீழே உள்ள எண்களில் ஒன்றை அழைப்பதன் மூலம் உதவியையும் கூடுதல் தகவல்களையும் நீங்கள் பெறலாம். நீங்கள் எந்த மருத்துவமனையை அழைக்க வேண்டும் என்று உங்கள் பேறுகாலச் செவிலியிடம் கேளுங்கள்.

- கன்குவெஸ்ட் மருத்துவமனை (Conquest Hospital), செயிண்ட் லியோனார்ட்ஸ்
  0300 131 4500
- ஈஸ்ட்போர்ன் மாவட்டப் பொது மருத்துவமனை (Eastbourne District General Hospital)
  0300 131 4500
- ராயல் சசெக்ஸ் கவுண்டி மருத்துவமனை (Royal Sussex County Hospital), பிரைட்டன்
  01273 696955
- பிரின்சஸ் ராயல் மருத்துவமனை (Princess Royal Hospital), ஹேவர்ட்ஸ் ஹீத்
  01444 441881
- செயின்ட் ரிச்சர்ட்ஸ் மருத்துவமனை (St Richard's Hospital), சிசெஸ்டர்
  01243 788122
- வொர்திங் மருத்துவமனை (Worthing Hospital)
  01903 205111
- கிழக்கு சர்ரே மருத்துவமனை (East Surrey Hospital)
  01737 768511



Sussex Local Maternity & Neonatal System

# வழக்கமான பரிசோதனைகள்

**கர்ப்பக் காலத்தில் உங்களுக்கு ஆதரவளிப்பதற்கான கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து பார்க்கவும்:**

பேறுகால வலிக்கு முந்தைய நிலை குறித்த தகவல்கள் - NHS
nhs.uk/conditions/pre-eclampsia

கர்ப்பக்கால நீரிழிவுநோய் பற்றிய தகவல்கள் - NHS
nhs.uk/conditions/gestational-diabetes

இரத்தச்சோகை பற்றிய தகவல்கள் - NHS
nhs.uk/conditions/iron-deficiency-anaemia

கர்ப்பக்காலச் சிக்கல்கள் - டாமி’ஸ்
tommys.org/pregnancy-information/complications

உங்களிடம் இணைய இணைப்பு இல்லையென்றால், உங்கள் பேறுகாலச் செவிலியிடம் மேலேயுள்ள ஏதேனும் இணைப்புகளில் இருந்து உங்கள் தகவல்களை அச்சிட்டுத் தருமாறு நீங்கள் கேட்கலாம்.



Sussex Local Maternity & Neonatal System